தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டுக் கொண்டதைப் போல சுண்ணாம்புக்கால்வாய் போன்ற தொழில்களுக்கு தனி நபர் கடனும், கூட்டுறவுக் கடனும் வழங்கி வருவதால், தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள எல்லாக் கிராமங்களிலும் இப்படிக் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தனி நபர் இந்தத் தொழிலில் ஈடுபடுவதற்கு கடன் கேட்டு விண்ணப்பிக்கிறபோது, அரசு உடனடியாக அதற்குரிய உதவியைச் செய்து வருகிறது. மேலும், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சிறப்பான ஆட்சியில் இத்தகைய கடன் வசதிகளைக் கேட்கிற போது, உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. குறுகிய கால வினா :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினா எண். 2, திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

குறுகிய கால வினா எண். 2—

கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையைப் புறநகர்ப் பகுதிக்கு மாற்றல்.

*19559 —திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையைப் புறநகர்ப் பகுதிக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ):கோவை மத்திய சிறைச்சாலையைப் புறநகர்ப் பகுதிக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற கோவை தவிர, மற்ற நகரங்களில் மத்திய சிறைச்சாலைகள் நகரத்திற்கு அப்பால் அதிக தொலைவில் இருக்கின்றன, சான்றாக, வேலூரில் இருக்கிற,

மத்திய சிறைச்சாலை துரைப்பாடியிலே இருக்கிறது. திருச்சியிலே இருக்கிற மத்திய சிறைச்சாலை புதுக்கோட்டைச் சாலையிலே இருக்கிறது. சென்னையில் இருக்கிற சிறைச்சாலையைக் கூட புழலுக்கு மாற்ற வேண்டும் என்று நாம் திட்டமிட்டு இருக்கிறோம். அப்படி இருக்கிறபோது-கோவை ஒரு சிறு நகரமாக இருந்தபோது, இப்போது இருக்கிற மத்திய சிறைச்சாலை அந்த நகரத்தின் புறநகர்ப் பகுதியிலே இருந்தது. கோவை நகரம் இன்றைக்கு வளர்ந்திருக்கிறபோது, அந்தச் சிறைச்சாலை நகரின் மையப் பகுதியிலே இருக்கிறது. நகரின் மையப் பகுதியிலே இருக்கிற அந்த முக்கியமான இடத்தினுடைய விலை இன்றைக்கு ஒரு ஏக்கருக்கு $1\frac{1}{2}$ கோடியிலிருந்து 2 கோடி ரூபாய் வரைக்கும் கிடைக்கும். அப்படியிருக்கின்றபோது 10 ஏக்கர் நிலத்தை ரூ. 20 கோடிக்கு விற்றாலும் கூட தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா சிறைச்சாலைகளையும் நாம் செப்பனிட முடியும் என்ற காரணத்தினாலே மையப் பகுதியிலே இருக்கின்ற மத்திய சிறைச்சாலையை புறநகர்ப் பகுதிக்கு பொள்ளாச்சியிலே இருக்கின்ற ஆளியாறுக்கோ அல்லது சிறுவாணிக்கோ நாம் மாற்றுவோம் என்று சொன்னால், அந்த காலி இடத்தில் ஒரு நல்ல கோளரங்கம் — பிளேனடோரியத்தை நாம் உருவாக்கமுடியும். ஒரு அறிவியல் பூங்காவை நாம் உருவாக்க முடியும். நிரந்தரமான ஒரு தொழில் நுட்ப பொருட்காட்சியை உருவாக்க முடியும். எனவே இதையெல்லாம் கருத்திலே கொண்டு, இந்த சிறைச்சாலையை புறநகர்ப் பகுதிக்கு மாற்ற அரசு முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11—15

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இவைகளை எல்லாம் மனதிலே வைத்துக் கொண்டு தான் எங்களுக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். துறை பரிசீலனை செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட சிறைச்சாலையை நகரின் மையப்பகுதியிலேயிருந்து புறநகருக்கு மாற்றுவதற்கு அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்காக அரசுக்கு ஆகும் செலவு எவ்வளவு, சிரமங்கள் என்ன என்பதை அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, ரூ. 50 கோடி பிடிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ னிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தினுடைய பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலமாக அரசுக்கு அனைவரும் பரிந்துரை செய்திருக்கிறோம். பாதுகாப்பைப் பொறுத்தவரை காஷ்மீர், பஞ்சாப் போன்ற தீவிர வாதிகளை கோவை மத்திய சிறையிலே அடைத்து வைத்திருப்பதும், பாதுகாப்புக் குறித்து நகரத்தின் மையப் பகுதியிலே இந்த சிறைச்சாலை இருப்பது என்பது ஆரோக்கியமான சூழ்நிலை அல்ல. ஆகவே கோவைக்கும், பெரியார் மாவட்டத்திற்கும் இடையில் புறநகர்ப் பகுதியிலே மிக விரைவாக இந்த சிறைச்சாலையை அமைப்பதில் அரசு முன்வருமா, அந்த அளவில் செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளை மனதிலே வைத்துக் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்ய ஆணையிட்டிருக்கிறார்கள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்— தொடர்ச்சி

145—

மேலூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கைகள். அமைத்தல்.

*9016—திரு. கு. வெ.வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி, மேலூர் அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக 100 உள்நோயாளி சிகிச்சைக்குப் படுக்கைகள் ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மேலூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதலாக 100 உள்நோயாளி சிகிச்சைக்கு படுக்கைகள் ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.